# மக்கள் மறுவாழ்வு

விவாதம் தொடர்கிறது
கட்டுரை (உள்ளே)

மலர்: 4 | மாசி-பெப்ரவரி 1986 | விலை 75 காசுகள் | இதழ்: 5

## தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி அதிகாரிகளின்

# மெத்தனப் போக்கு!

**தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி அதிகாரிகளின் மெத்தனம்-உதாசீனப் போக்கு போன்ற காரணங்களால் வங்கியிலுள்ள (தாயகம் திரும்பியோர்) உறுப்பினர்களுக்கு நன்மை ஏற்படுவதாக இல்லை**

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு மற்றும் நிதி வளர்ச்சி வங்கி தாயகம் திரும்பியோருக்காகவே-அவர்களுக்கு மறுவாழ்வு உதவிகள் செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. இந்த வங்கியில் 13,000 பேருக்கு மேற்பட்ட தாயகம் திரும்பியோர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு கடனுதவியும் (இது நிறுத்தப்பட்டு விட்டது.,வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. பல ஆயிரம் பேர் அரசு, கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள் பெற்றுள்ளார்கள்.

இது ஒரு கூட்டுறவு வங்கி என்பதால், மூன்றாண்டுக்கு ஒருமுறை சார்பாளர்கள்(டெலிகேட்டுகள்)தெரிவு செய்யப்படுகிறார்கள். சார்பாளர்கள் மூலம் தாயகம் திரும்பியோர் பிரச்சனைகளைக் கவனிக்க ஒரு இயக்குனரும் (டைரக்டர்) தெரிவு செய்யப்படுகிறார். இவர் தாயகம் திரும்பியோருக்காக இயக்குனர் குழுவில் ஒரு இயக்குனராக (டைரக்டர்) இடம் பெறுகிறார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஆனால், வங்கியில் பணி செய்யும் அதிகாரிகளோ இது தாயகம் திரும்பியோருக்காக அவர்களது மறுவாழ்வு நலன்களுக்காக இருக்கும் வங்கி-ஆரம்பித்து நடத்தப்படும்வங்கி என்பதை மறந்து விடுகிறார்கள். 'அகதிகளாக வந்தவர்கள் தானே; இவர்களுக்கு என்ன?' என்ற மெத்தனப் போக்கோடு நடப்பதோடு, அவர்களை அணுகும் தாயகம் திரும்பிய அங்கத்தவர்களை ஊதாசீனம் செய்கிறார்கள் - எந்த பிரச்சனைக்காக வங்கிக்குச் சென்றாலும் - இவர்களை அணுகினாலும் நாயை விரட்டுவது போன்று விரட்டுகிறார்கள்.

இதனால் உறுப்பினர்கள் தாம் வேலை வாய்ப்பு பெற்ற நிறுவனத்தில் - தமது தொழில் விடயத்தில் ஏற்படும் தகறாறுகளை - பிரச்சனைகளை தீர்க்க முடியவில்லை - உறுப்பினர்களின் கோரிக்கைகளை காதில் வாங்கிக் கொள்வதே இல்லை.

இந்த அதிகாரிகள், நிர்வாக இயக்குனர் போன்ற மிக முக்கியமானவர்களையும் அணுகவிடுவதில்லை; பார்க்க தடை செய்கிறார்கள். நிர்வாக இயக்குனர் போன்றவர்களை எங்கே பார்ப்பது எப்படி பார்ப்பது என்று தெரியாது உறுப்பினர் திரும்புகிறார்கள்.

யாருக்காக இந்த வங்கி நிறுவப்பட்டதோ அந்த தாயகம் திரும்பியோர்களை கவனிப்பதில்லை; ஆனால் இந்த அதிகாரிகள், கடன் கேட்க வரும் தொழில் அதிபர்கள் - உரிமையாளர்களுக்கு ரொம்பவும் மரியாதை கொடுத்து வரவேற்கிறார்கள். அவர்கள் வந்தாலே எழுந்து நின்று பயபக்தியோடு பவ்வியமாக மரியாதை செலுத்துகிறார்கள். தாக சாந்திற்கு குளிர்பானங்களெல்லாம்வழங்கி உபசரிப்பதோடு மட்டுமல்ல, வாசல் வரை - வீதிவரை கூட-சென்று வழி அனுப்பி வருகி

(11-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை மலையகத்தில் கலவரம்

# வரலாற்றில் புதிய திருப்பம்!

1986-ல் மலையகத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. சிங்கள மக்களின் இனவெறிக்கு எதிராக இலங்கை தோட்டத் தொழிலாளர்கள் தற்காப்பு யுத்தம் மேற்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் நடந்த பல கலவரங்களில் சிங்களவரின் தாக்குதல்களுக்கு ஆளாகி மலையகத் தமிழ் மக்கள் உயிர் உடமை ஆகியவற்றை இழந்தனர். சிங்களவரின் கொடுமைகளுக்கு தமிழ் பேசும் மக்கள் அஞ்சியே வாழ்ந்து வந்தனர்.

மலையக மக்களின் உரிமைகளுக்கு போராட தொண்டமானின் இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் இந்த ஆண்டை அமைதி ஆண்டாக செய்கிற முயற்சியாக தியானம் பிராத்தனை மூலம் ஒரு அகிம்சா போராட்டத்தை பொங்கல் திருநாளில் தொடங்கி வைத்தது.

நாடற்றவர்களான 94,000 தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டுமென இந்திய இலங்கை அரசுகள் முடிவு செய்தன இதன் எதிரொலியாக எதிர்க் கட்சி தலைவியான ஸ்ரீமாவோ பண்டார நாயகா குடியுரிமை வழங்கக் கூடாதென கடுமையாக எதிர்த்தார். சிங்கள மக்கள் மலையக மக்க

(12-ம் பக்கம் பார்க்க)

மக்கள் மறு வாழ்வு

மலர்: 4 மாசி 1986 இதழ்: 5

## குடியுரிமை மட்டும் பாதுகாப்பல்ல

இலங்கையிலுள்ள நாடற்ற தமிழர்கள் 94,000 பேருக்கு குடியுரிமை வழங்க வகை செய்யும் மசோதாவை இலங்கை நாடாளுமன்றம் (31-1-86) நிறைவேற்றியுள்ளது.

இது இ. தொ. கா.வின் முயற்சிக்கு ஒரு வெற்றி என்று கூட சொல்லலாம். இந்த உரிமைக்காக இ. தொ. கா. சொங்கலன்று ஆரம்பித்த பிரார்த்தனைப் போராட்டத்தையும் 2 நாட்களோடு முடித்துக் கொண்டது.

94,000 பேருக்கு குடியுரிமை கிடைத்தது நமக்கு மகிழ்ச்சி யென்றாலும், அவர்களது உயிருக்கும் உடமைக்கும் என்ன பாதுகாப்பு? என்ற கேள்வி நம்மை நோக்கி நிற்கிறது.

இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா குடியுரிமை வழங்கக் கூடாது. மலையகத் தமிழர்களுக்கு எதிரான ஒரு போருக்கு சிங்கள மக்கள் தயாராக வேண்டுமென்று அறைகூவல் விடுத்து வருகிறார்.

நாடற்ற மக்களுக்கு குடியுரிமை வழங்க முன் வந்ததும், 1980யில் பறிக்கப்பட்ட ஸ்ரீமாவோவின் குடியியல் உரிமைகளை மீண்டும் வழங்கியதும், பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டு விட்டதாக உறுதிமொழி எடுக்க மறுத்ததால் நாடாளுமன்ற பதவியை இழந்த 14 தமிழ் எம். பி. க்களும் மீண்டும் நாடாளுமன்றத்திற்கு திரும்புவதற்காக நடவடிக்கை எடுக்க ஆராய்ந்து வருவதும் ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் மனமாற்றம் என்று சொல்வதற்கில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு பேச்சு வார்த்தை தீர்வல்ல; இராணுவ நடவடிக்கையே தீர்வு என்று சொல்லும் இவர், எடுத்த இந்த நடவடிக்கைகள் எல்லாமே ஏதோ நிர்ப்பந்தம் அல்லது தனது ராஜதந்திரத்தின் காரணமாகவே எடுத்துள்ளார் என்பதே உண்மை.

இந்தியத் தமிழர்கள் நாடற்றவர்களாக இருப்பதே இந்திய அரசு இலங்கை விஷயத்தில் தலையிட காரணமாக இருக்கிறது. இவர்களுக்கு குடியுரிமை கொடுத்து விட்டால் இந்தியா தலையிடவே முடியாது என்று ஜே.ஆரின் பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி குறிப்பிட்டுள்ளதும் கவனிக்கத் தக்கது.

தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளையோ, சமத்துவமாக வாழத்தக்க தகுந்த பாதுகாப்பையோ வழங்க சிங்கள தலைமை-அரசியல் தலைவர்கள்-பௌத்த மண்டலம் அனைத்துமே தயாராக இல்லை-ஆக குடியுரிமை வழங்குயிருப்பது மட்டும் அம்மக்களின் உயிருக்கோ உடமைக்கோ பாதுகாப்பானது இல்லை என்பதை உணர் வேண்டும். 0

## 5,000-க்கு மேற்பட்ட அகதிகள்

# தாயகம் திரும்பிச் சென்றனர்?

எத்தனை காலத்திற்கு நாங்கள் இந்தியாவின் கையை எதிர்ப்பார்க்கும் நிலையில் இருப்பது இப்போதைக்கு இலங்கை பிரச்சனை தீராது போலிருக்கிறது.

இந்த நிலையில் முகாம்களில் அகாதிகளாக இருப்பதால் எங்கள் வாழ்க்கை சீரழிகிறது. எங்கள் குழந்தைகளின் எதிர் காலம் பாழாகிறது

இந்திய அரசு எங்களுக்கு உதவுகிறது: அரசியல்வாதிகள்-தலைவர்கள் எங்களுக்காக குரல் கொடுக்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட வகையில் உதவுவதில் யாருக்கும் எண்ணம் இல்லை.

அரசு அதிகாரிகள் எங்கள் மீது இரக்கம் காட்டுவதில்லை; மிக வெறும்போடு நோக்குகிறார்கள். தமிழர்களாக எங்களை மதிக்கவில்லை, அன்னியர்களாகவே பார்க்கின்றார்கள்.

இந்த நிலையில் தொடர்ந்து இருந்து எவ்வளவு காலத்திற்கு கஷ்டப்படுவது?

இப்படி கஷ்டப்படுவதை விட உயிர் போனாலும் பரவாயில்லை - இப்படி அகதிகள் முகாம்களிலுள்ள அகதிகள் தெரிவிக்கிறார்கள்.

இப்படி சொல்லிப்புலம்ப மட்டும் செய்ய வில்லை.

தமிழகத்தில் பல பகுதிகளில் இருக்கும் எல்லா முகாம்களிலிருந்துமே அகதிகள் திரும்பி சென்றிருக்கிறார்கள் - சென்று கொண்டும் இருக்கிறார்கள். இராமேஸ்வரக் கரையிலிருந்து இதுவரை 5000க்கு மேற்பட்ட அகதிகள் திரும்பிப் போய் விட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

அதிகாரிகள் அகதிகளை அடிமைகளைப் போல நடத்துவது மட்டும் காரணமல்ல அடிப்படை வசதிகள் இல்லை அம்மைப் போன்ற நோய் நொடிகள் ஏற்பட்டு பலர் மரணமாயிருக்கின்றனர். மருத்துவ வசதியின்மைக் காரணமாகும்.

❋

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள 12 அகதிகள் முகாம்களிலுள்ள பலர் தங்களை சேலம், செங்கல்பட்டு மாவட்டங்களிலுள்ள முகாம்களுக்கு மாற்றும்படி கோரியுள்ளனர்.

❋

அம்மைப் போன்ற நோயில் பீடிக்கம்படுகிறவர்களுக்கு போதிய மருத்துவ வசதிகள் இல்லாததாலும், அடுப்பெரிக்க விறகு போன்ற பொருட்கள் சேகரிக்கும் வசதியில்லாததாலும், போதிய போக்குவரத்து வசதியும், கடை கண்ணி வசதியும் இல்லாததே இவர்கள் இடம் மாற்றம் கோரக் காரணம்.

நாடக நிந்திலம்

## உங்கள் கவனத்திற்கு

கட்டுரை
செய்திகள்
மற்றும்
விடயங்கள்

அனுப்புகின்றவர்கள் ஒவ்வொரு மாதமும் 15ந் தேதிக்கு முன் எமக்கு கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.

— ஆசிரியர்

# ஊராட்சித் தேர்தலில் தாயகம் திரும்பியோர் போட்டி!

வரும் ஊராட்சி தேர்தல் களில் தாயகம் திரும்பியோர் கள் பலரும் போட்டியிட இருக் கிறார்கள்.

15 ஆண்டுக்கால இடை வெளிக்குப் பிறகு ஊராட்சி தேர்தல் பெப்ரவரி மாதம் பிற் பகுதியில் நடைபெற விருக்கி றது.

சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந் தத்தின் கீழ் நாலரை லட்சம் பேர் தாயகம் திரும்பி விட்டார் கள். தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இவர்கள் பரவி தமது மறுவாழ்வினை அமைத் துக் கொண்டு வாழ்ந்து வரு கிறார்.

## மறுவாழ்வு திட்டத்தின் கீழ்....

இவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் உதவிகள் அளிக்கப்பட்டு வருகிறது. அந்ததிட்டத்தின்கீழ் சர்க்கரை, நூற்பாலை போன்ற மில்களி லும், தேயிலை, ரப்பர், ஏலம், காப்பி போன்ற மலைத் தோட் டங்களிலும். விவசாயத்தில் ஈடுபடும் நிலக்காலனிகளிலும் குடியமர்த்தப்பட்டு இருக்கி றார்கள்.

தமிழகத்தில் மட்டுமல்ல; கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களிலும் குடிய மர்த்தப்பட்டிருக்கிறார்கள், மேற்படி பிற மாநிலங்களில் சில ஆயிரம் பேர்கள் மட்டுமே குடி யமர்த்தப் பட்டிருக்கிறார்கள். மிகுதி அனைத்து பேர்களும் தமிழகத்தில்தான் குடியமர்த் தப் பட்டிருக்கிறார்கள். குடி யமர்த்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் திருச்சி, புதுக் கோட்டை, மதுரை ஆகிய மாவட்டங்களிலேயே பெரும் பான்மையினர் குடியேறியுள் ளார்கள். குறிப்பாக நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற மலைப் பகுதிகளில் மிக அதிகமானவர்கள் குடி யேறியுள்ளார்கள்.

## இலங்கையர் காலனிகள்

தாயகம் திரும்பி குடியேறிய யுள்ள இவர்கள், அரசினாலும் சுயமாகவும் குடியிருப்புகளை யும்—காலனிகளையும் ஏற் படுத்தி வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்கள் குடியமர்த்ந்துள்ள சர்க்கரை ஆலைகள், நூற்பா லைகள் மற்றும் நிலக்காலனி கள், குடியிருப்புக் காலனிகள் எல்லாமே 'இலங்கைக் காலனி கள்' என்ற பெயரோடு தனித் தனியாகவே இருக்கின்றன. அதிகப்படியாக இவர்கள் குடி யமர்ந்துள்ள மாவட்டங்கள் தோறும் நூற்றுக்கணக்கான காலனிகள் இருக்கின்றன.

தமிழ்நாடு முழுவதும் அரசு அமைந்துள்ள காலனிகள் மட் டுமே 44 ஆகும் புதுக்கோட் டை, சேலம், திருச்சி முதலான மாவட்டங்களில் மட்டுமே தாய கம் திரும்பியோர் தாமே சுய மாக அமைத்துக்கொண்ட நூற் றுக்கு மேற்பட்ட குடியிருப்பு கள் இருக்கின்றன. நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி பகு தியில் மட்டுமே 32 காலனிகள் கள் இருப்பது குறிப்பிடத்தக் கது. அதே மாவட்டத்தில் கூட லூர் பகுதியிலும் பல காலனி கள் இருக்கின்றன.

## வசதிகள் இல்லை

இந்த காலனிகளுக்கு எந்த வசதிகளும் இல்லை; குடிநீர் வசதியில்லை; தெரு விளக்கு வசதியில்லை; பாதை வசதி இல்லை. இன்னும் கழிப்பிட வசதி, இடுகாடு - சுடுகாடு வசதி, வானொலி, விளையாட் டுத் திடல், பூங்கா, உடற் பயிற்சி வசதி, மருந்தக வசதி, தாய்சேய் நலவிடுதி, சுகாதார வசதி, வேலை வாய்ப்பு வசதி என எந்த வசதியுமே இல்லை.

1968-லிருந்து தாயகம் திரும்பி குடியமர்ந்து அமைந் துள்ள இந்த குடியிருப்பு வசதி களுக்காக இதுவரை போராடி வருகிறார்கள். ஆனால் அவை சார்ந்த ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிகள் கண்டு கொள் ளவே இல்லை; அக்கறை செலுத்தவில்லை. அதிகாரிகள் 'அகதிகள்' தானே என்று அலட்சியம் காட்டியே வந்தி ருக்கிறார்கள்.

## ஊரரட்சித் தேர்தலில் போட்டி

தமது குடிருப்புகளுக்கு வேண்டிய வசதிகளுக்கு உரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், இந்த நாட்டு சமூக பொருளா தார, அரசியல் வாழ்வில் பங் கேற்க வேண்டும் என்ற வகை யிலும் எதிர்வரும் ஊராட்சி தேர்தல்களில் தாயகம் திரும்பி யோர் பலர் போட்டியிடுகிறார் கள்.

போட்டியிட தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறவர்கள் வெவ் வேறு அரசியல் கட்சிகளில் இருக்கிறார்கள். தாம் சார்ந்த கட்சிகளின் சார்பிலும், சுயேச் சையாக பேரட்டியிட முனைந் துள்ளார்கள்.

15 ஆண்டு கால இடை வெளியில் ஊராட்சி தேர்தல் நடைபெறுவதால் பெரும்பா லான தாயகம் திரும்பியோர் களுக்கு இதுவே முதலாவது ஊராட்சி தேர்தலாகும். O

---

பர்மா தமிழர் வீட்டுப் பிரச்சனை

## சர்வக்கட்சி நடவடிகைக்குழு

சென்னை வியாசர்பாடி சாஸ்திரி நகர் பர்மாத் தமிழர் வீட்டுப் பிரச்சனையில் இரு சங்கங்கள் இயங்கி வந்தன. இச் சங்கங்கள் ஒன்றாக இணைந்து இப்பிரச்சினையை ஒட்டி நடவடிக்கை எடுத்து வருகிறது.

மறுவாழ்வு இயக்குனர் கேட் டுக் கொண்டதற்கிணங்க இரு சங்கங்கள் இணைந்து 'பர்மாத் தமிழர் வீட்டுப் பிரச்சனை சர்வ கட்சி நடவடிக்கைக் குழு' என்று ஒன்றை அமைத்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இக்குழுவின் முயற்சியில் சம் பந்தப்பட்ட வீட்டுப் பிரச்ச னையில் சம்பந்தப்பட்ட அதி காரிகள் அக்கறை எடுத்து சம் பந்தப்பட்ட வீட்டு மனைகளை யும் பார்வையிட்டு, அது தொடர்பான பிரச்சனையில் தீர்வுகாண நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். O

---

## கோத்த கிரியில் பயிற்சி முகாம்

தாயகம் திரும்பியோர் மறு வாழ்வு ஆய்வு மற்றும் தகவல் மையமும், ஜே. ஆர். எஸ். ஸும் இணைந்து 23-2-86 அன்று கோத்தகிரியில் ஒரு நாள் கருத்தரங்கம் ஒன்றை நடத்த இருக்கிறது.

'நமது வீட்டை தாமே கட்டு வது' என்பது பற்றிய பயிற்சி முகாமை இக்கருத்தரங்கம் நடத்த இருக்கிறது. O

### கோத்தகிரியில் கருத்தரங்கம் :

# கையிருப்பை பெருக்குவோம் குடியிருப்பை திருத்துவோம்

பொருளாதாரமுன்னேற்றமும் வீடு கட்டுதலும் குறித்து தாயகம் திரும்பியோருக்கான கருத்தரங்கம் ஒன்று கோத்தகிரி, வெஸ்ட் புருக்கில் நடைபெற்றது.

தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு ஆய்வு தகவல் மையமும், ஜே. ஆர். எஸ்ஸும் இணைந்து நடத்திய இக்கருத்தரங்கில், சிக்கனம் பற்றியும் சிக்கனத்தின் மூலம் சேமிப்பு, சேமிப்பின் மூலம் சுயமாக வீடு கட்டுதல் குறித்து பலர் கலந்து கொண்டு பேசினர்.

ஸ்டேட்பேங்க் ஆப்இந்தியாவின் கிராமிய அலுவலர் திரு. எஸ். மூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். வறுமைக் கோட்டிற்கு என்னென்ன உதவிகள் செய்கின்றன. அவற்றைக் கொண்டு எவ்வாறான உதவிகள் பெறலாம் - பயனடையலாம் என்பது குறித்து விளக்கமாக தகவல்களை தெரிவித்தார்.

கோத்தகிரி கூட்டுறவு வீடு கட்டும் சங்கச் செயலாளர் திரு போஜன் அவர்கள் கலந்துக் கொண்டு கூட்டுறவு மூலம் கடன் பெற்று வீடு கட்டுதல் குறித்து பேசினார். கூட்டுறவு மூலம் எவ்வாறு கடன் பெறுவது, வீடுகள் கட்டுவது என்பது குறித்து விளக்கமாக தெரிவித்ததோடு, தமது கூட்டுறவு வீடு கட்டும் சங்கச் செயல்பாடு குறித்தும் பேசினார்.

## சிக்கனம்- சேமிப்பு

இக்கருத்தரங்கில் சிக்கனத்தின் அவசியம் பற்றியும் எப்படி கூட்டுறவு அடிப்படையில் சேமிப்பது என்பது பற்றி பலர் தமது கருத்துக்களை தெரிவித்தார்கள்.

ஒரு பகுதியில்-ஒரு குடியிருப்பில் உள்ளவர்கள் அனைவரும் சேர்ந்து சேமிக்கும் முயற்சியில் ஈடுபடும் போது அவர்களுக்குள்ள வேற்றுமை நீங்கி எவ்வாறு ஒற்றுமை பெருகுகிறது என்பது பற்றி தெரித்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது. ஒற்றுமை மட்டுமல்ல; சிக்கனம் - சேமிப்பு முயற்சியால் குடித்தல் சூதாடல், சினிமா பார்த்தல், தீயப் பழக்கவழக்கங்கள் குறையவும், பல தீய வழியிலிருந்து திருந்தி நல்ல வழியில் நடக்கவும் முடியும் என்பது பற்றியும் தகவல்கள் இங்கு வைக்கப்பட்டன.

கூட்டுறவு மூலம் சேமிப்பது போன்ற பழக்கங்கள் ஏற்படுவதால் அவர்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தாமே பஞ்சாயத்து போன்றவற்றை ஏற்படுத்திக் கொள்ளவும் வழிகள் ஏற்படுகின்றன என்பது போன்ற உண்மைகளும் இங்கு தெளிவுறுத்தப்பட்டன.

ஆந்திர பிரதேஷ் விஜயவாடாவிலிருந்து சகோதரி அன்ரீஸியா, கல்லூரி அதிபர் பாதர் அமல்ராஜ் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்துக் கொண்டனர்.

இவர்கள் நமது கையே நமக்குதவி என்று தமது அனுபவங்களையும், பணிகளை கருத்தரங்கில் கலந்து கொண்டோரோடு பகிர்ந்துக் கொண்டார்கள்.

## நமது கையே நமக்கு உதவி

ஆந்திராவிலுள்ள நாகலங்கா என்ற தீவு 1977யில் ஏற்பட்ட புயலில் அழிந்தது. அதன்பின் அங்கு மனிதர்களே வாழவில்லை. உயிர் தப்பிப் பிழைத்தோருக்கு நிவாரணங்கள் அளிக்கப் பட்டன —செஞ்சிலுவை போன்ற சர்வதேச ரீதியான அமைப்புகளெல்லாம் இவர்களுக்கு நிவாரண உதவிகள் அளித்தன, ஆனால் அந்த உதவிகளெல்லாம் எவ்வளவு காலத்திற்கு ? சில மாதங்களுக்குதான்.

அதன்பின் அந்த மக்கள் அந்த தீவுக்கே போக மறுத்துவிட்டனர். இந்த வேளையில் தான் புனித சகோதரி அன்ரீஸியா, பாதர் அமல்ராஜ் போன்றவர்கள் முன் வந்தனர்.

அவர்களை ஒன்று சேர்த்து அதே தீவில் குடியமர்ந்து அவர் வாழவும்-அவர்கள் நம்பிக்கை துளிர்விடவும் வழி செய்தனர்.

அந்த வகையில் தாயகம் திரும்பியோர் யாருடைய கரத்தையும் எதிர்பார்க்காமல் தமது கையே தமக்கு உதவி என வாழவேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

சிக்கனம் - சேமிப்பின் அவசியம் பற்றியும் தாம் கொண்ட முயற்சிகளின் வெற்றி பற்றியும் கூட குறிப்பிட்டனர். தமது முயற்சியில் சேமிப்பின் மூலம் இன்று 5000 கிராமங்களிலுள்ள மக்களின் 22 கோடி ரூபா சேமிப்பு வங்கியில் இருக்கிறது என்ற தம்பிக்கையூட்டும் தகவலையும் தெரிவித்தனர்.

## மன்றப் பணிகள்

இக்கருத்தரங்கில், கோத்தகிரியில் தாயகம் திரும்பியோர் மத்தியில் அமைக்கப்பட்ட மக்கள் மறுவாழ்வு மன்றங்களின் இரண்டு மாத பணிகள் குறித்தும்—பெண்கள் முன்னேற்றத்திற்கான பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

இந்த மன்றங்களில் உள்ளூர் இளைஞர்களும் சேர்ந்துள்ளனர்.

- இரண்டு மாதங்களில் 15 மக்கள் மறுவாழ்வு மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன,
- கோத்தகிரி பாண்டியநகர் குடியிருப்பிலுள்ளோர் தமது சொந்த முயற்சியில் வீடுகள் கட்டியுள்ளனர். ஒரு விளையாட்டுத்திடலை அமைத்துள்ளனர்.
- பல காலனிகளில் இராப் பள்ளிகள் அமைக்கப் பட்டுள்ளன. விளையாட்டுத் திடல்கள், சமூகக்கூடங்கள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

மக்கள் மறுவாழ்வு மன்றம் பணிகள் கணிசமாக நடந்துள்ளது இந்த ஆய்வு மூலம் தெரிய வந்தது.

## உதவிட உறுதி

இறுதிநாள் கருத்தரங்கில் உதகை மண்டல மேதகு ஆயர் கலந்துக் கொண்டு தாயகம் திரும்பியோர் நல்வாழ்வுக்கு - முன்னேற்றத்திற்கு திருச்சபை எல்லாவகை உதவிகளும் அளிக்கும் என உறுதி அளித்தார்.

இந்த கருத்தரங்கில் தகவல் மைய இயக்குனர் ஆர். ஆர். சிவலிங்கம், ஐலண்ட் டிரஸ்ட் தலைவர் திருச்செந்தூரன், ஜே. ஆர். எஸ்., இந்தியக் கிளைத் தலைவர் குட்டினா, தந்தை ஏப்ராம், சந்திரசேகரன், சாந்த கிருஷ்ணன் ஆகியோர் கலந்துக் கொண்டனர். O


## மக்கள் மறுவாழ்வு

**சந்தா விபரம்**

தனிப்பிரதி 75 காசு

ஆண்டுச் சந்தா ரூபா 10-00

சந்தா அனுப்புவோர் 'மக்கள் மறுவாழ்வு' என்ற பெயருக்கு பேங்க் டிராப்ட், மணியார்டர், போஸ்டர் மூலம் அனுப்பலாம்.

விபரங்களுக்கு:

**மக்கள் மறுவாழ்வு**

சென்னை-600094.

# இந்தியாவுக்கு வருகை தரும் போப்



போப் ஜான் பால் II, கத்தோலிக்க மதத் தலைவரின் இந்திய வருகை எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளது. இவர் பெப்ரவரி 1 முதல் 10 தேதி வரை இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் கூட்டங்கள், பிரசங்கங்கள், பிரார்த்தனைகள் ஆகியவற்றில் கலந்து கொள்கிறார். இந்திய அரசின் விருந்தாளியாக வருகிறார்.

உலகில் 200 கோடி கிருத்துவர்கள் இருக்கிறார்கள். கிருத்துவ மதத்திற்குள் பல்வேறு பிரிவுகள் உள்ளன. (இந்து மதத்தில் சைவம், வைணவம் போல) இதில் சுமார் 80கோடி மக்கள் தழுவியுள்ள பிரிவாக ரோமன் கத்தோலிக்க மதம் உள்ளது. ஏசு கிறிஸ்துவின் நேரடி வாரிசாக கருதப்படும் 'போப்' இதன் முழு அதிகாரம் பெற்ற தலைவர். ஏசுநாதரின் 265 வது வாரிசான இரண்டாம் ஜான் பால் சோசலிச நாடான போலந்தில் பிறந்தவர். பொதுவாக இத்தாலியை சேர்ந்தவர்கள் தான் போப்பாக தேர்ந்தெடுக்கப்படுவர். இவர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர் என்பதுகுறிப்பிடத் தக்கது.

## வத்திக்கன் நகரம்

உலகத்தின் மிகச் சிறிய வத்திக்கன் நகரம் போப்பின் முழு ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடாகும். இத்தாலியின் நடுவில் இருந்தாலும், இத்தாலியின் தூதரகம் வத்திகானில் உள்ளது. சுமார் 120 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட இந்த நகரத்தில் அமைந்துள்ள போப்பின் மாளிகை தான் உலகத்தின் மிகப்பெரியகட்டிடமாகும். இங்குள்ள புனித இராயப்பர் ஆலயம்தான் உலகிலே மிகப் பெரிய ஆலயமாகும். உலகப் புகழ் பெற்ற மைக்கேல் ஆஞ்சலோவின் ஓவியங்களால அலங்கரிக்கப் பட்டுள்ளது இந் நகரம். இந்த நகருக்கென தனியான ராணுவம், வானொலி நிலையம், நாணயம், இரயில்வே நிலையம் முதலியன அடங்கிய சாம்ராஜ்யமாக விளங்குகிறது.

போப், மற்றும் அவரது உதவியாளர்கள் உபயோகிக்க அதி நவீன வாகனங்களாலும், தினமும் உலகெங்கிலுமிருந்து இந்நகரக்கு வரும் பல்லாயிரக் கணக்கான வசதி படைத்த சுற்றுலா பயணிகளாலும் இந் நகரம் 'சொர்க்கம்' போல காட்சியளிக்கிறது. இது தவிர குண்டு துளைக்காத கார்களும் தங்கத்தால் செய்யப்பட்ட தொலைபேசிகளும், வைரக் கற்கள் பொதிந்த தங்கக் கிரீடமும் இவருக்கு என உள்ளது. இதுவே கத்தோலிக்க மதத்தின் தலைமைப் பீடம்.

## போப்பின் அதிகாரங்கள்

ரோமாபுரி ஆயர், ஏசுகிருஸ்துவின் பிரதிநிதி, அப்போஸ்தலபணியின் வாரிசு, உலகத் திருச்சபையின் முதன்மை குரு மேற்குலகின் வம்சத்தந்தை, வத்திகன் நகரத்தின் முதல் குடிமகன், கடவுள் ஊழியரின் ஊழியன் ஆகியன இவரது பட்டப் பெயர்கள்.

எந்த அரசியல் நிர்ணயச்சட்டமும் இல்லாத வத்திக்கனின் தனி ஆளும் தலைவர். வத்திகனின் தூதரகங்கள் உலகெங்கும் உள்ளது. வத்திகன் நாட்டினுள் நுழைய 'விசா' போன்றவை தேவையில்லை. மேற்கத்திய நாடுகளை ஆட்டிப் படைக்கும்அதிகாரமும். வல்லமையும் இவருக்குண்டு.

உலக கத்தோலிக்க நிறுவனங்களின் பலகோடிக் கணக்கான சொத்துக்களுக்கு இவரே அதிபதி. உலகத்திலே அதிக வருமானமுள்ள திருப்பதி ஆலயத்தைப் போல பல ஆயிரக் கணக்கான மடங்கு சொத்துக்கள் இவரது ஆளுகையில் உள்ளது. கடுமையான பாதுகாப்பு சோதனைகளுக்குப் பின்னரே உயர்ந்த மதகுருக்களே இவரை தரிசிக்க முடியும். ஒவ்வொரு புதன்கிழமையும் மக்களுக்கு காட்சியளிப்பார்.

கத்தோலிக்க சபையின் சட்ட திட்டங்களை வரையறுப்பவர் இவரே. இவருக்கு ஆலோசனை வழங்க உலகம் முழுவதிலும் பிரதிநிதிகள் உள்ளனர். உலக ஆயர்களைக் கொண்ட வத்திக்கன் சபையும் ஆலோசனை வழங்குவதுண்டு.

## இந்திய வருகை

இந்தியாவிற்கு அரசு விருந்தினராக வரும் முதல் போப், இவர் தான். இந்தியாவின் கிருஸ்துவர்களுக்கு காட்சியளிக்க, புனித ஸ்தலங்களை பார்வையிட, கேரளத்தில் வாழ்ந்த இரு துறவிகளுக்கு புனிதர் பட்டம் வழங்கவும் வருகை தருவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. ஆயினும் பல்வேறு பிரிவினர் இவரது வருகையை எதிர்க்கின்றனர்.

கேரளத்தைச் சேர்ந்த 'முற்போக்கு' பாதிரிகள் அமைப்பைச் சேர்ந்த கிருஸ்துவர்களே எதிர்க்கின்றனர்.

இவரை தரிசிக்க லட்சக் கணக்கான மக்கள் ஆயத்தமாகியுள்ளனர். தமிழகத்தில் இவருக்கு விலையுயர்ந்த 'தஞ்சாவூர் தட்டு' வழங்க விருக்கின்றனர்.

-செ அ.

○

## சென்னை வருகை

போப் பெப்ரவரி 4-ந் தேதி சென்னை வருகிறார். சென்னைக்கு இதுவரை வந்த எந்த நாட்டுத் தலைவருக்கும் அளிக்கப்படாத பிரமாண்டமான வரவேற்பு மிகப் பெரிய பொருட் செலவில் இவருக்கு அளிக்கப் படுகிறது.

## அன்பளிப்புகள்

போப்பிற்கு தமிழக புராதன இசைக்கருவியான வீணை மற்றும் தஞ்சாவூர்த் தட்டு, தேசீயப்பறவையான மயில் சின்னம் போன்றவை வழங்கப்படுகின்றன, ○

**மக்கள் மறுவாழ்வுக்கு உங்கள் சந்தாவை செலுத்துங்கள்**

# 1986-ம் ஆண்டு ஒப்பந்தம் – ஒரு நோக்கு

இலங்கை வாழ், இந்திய வம்சாவளி தமிழர்களைப் பொறுத்தவரை 1986ஆம் ஆண்டு ஜனவரி ஒரு முக்கிய திருப்பு முனையாகும். 1964, 1974 ஆண்டுகளில் செய்து கொள் கொள்ளப்பட்ட சிரிமாவோ—சாஸ்திரி, சிரிமாவோ—இந்திரா ஒப்பந்தங்களின் நடைமுறைக் கோளாறுகளினால், உருவாகிய நாடற்றநிலை, இந்த 86ஆம் ஆண்டு ஒப்பந்தத்தால் நீங்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1964-ம் ஆண்டிலே நாடற்றவர்களாக இருந்த 975,000 பேரில் இந்தியாவுக்கு 5¼ இலட்சமும் இலங்கைக்கு 3 இலட்சமும் என பங்கிடப்பட்டது. மிகுதி 1½ இலட்சம் 1974ம் ஆண்டிலே இருநாடுகளாலும் சமமாக பங்கிடப்பட்டு கொண்டன ஆனால் ஒப்பந்த நடைமுறையில் 5 இலட்சத்து 6 ஆயிரம் பேர் இந்தியாவுக்கும் மற்றவர்கள் இலங்கைக்கும் மனுச்செய்தனர். இந்தியா ஏற்றுக் கொள்ள ஒப்புக்கொண்ட எண்ணிக்கை 6 இலட்சம். கிடைத்த விண்ணப்பங்கள் 5 இலட்சத்து 6 ஆயிரம். எனவே மிகுதி 94,000 பேர் இலங்கைக்கு மனுச் செய்து நிராகரிக்கப்பட்டவர்களே ஆகும். இவர்களே தற்போது நாடற்றவர்களாக கருதப் படுகின்றனர், 94,000 பேரையுமே இலங்கை தன்னுடைய பிரஜைகளாக ஏற்றுக் கொள்ள 86ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் மூலம் இணங்கியுள்ளது. பெப்ரவரி மாதம் அதற்கான சட்ட விதிகள் பாராளுமன்றத்தில் இயற்றப் படும். அதிலிருந்து 18 மாதங்களில் சட்டம் நடைமுறைப் படுத்தப்படும். அதாவது 1987 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாத அளவில் 94 000 பேரும் இலங்கை பிரசாவுரிமை பெறுவர்.

இந்த ஏற்பாடுகள் ஒருவரை உண்மையில் திருப்தி படுத்தி விடமுடியாது. ஏனெனில், இலங்கை பிரஜா வுரிமைப் பெறாத இன்னுமொரு பகுதியினர் தொடர்ந்து இருக்கவே செய்வர். அதாவது, இந்தியாவுக்குரிய 5 இலட்சத்து 6ஆயிரம் பேரும் இந்திய பிரஜாவுரிமை பெற்றதன்பின், 7க்கு 4 என்ற அடிப்படையில், அவர்களுக்குஇலங்கை பிரஜாவுரிமை வழங்கப்படும்.

இதுவரை, இந்திய பிரஜாவுரிமை 421,207 பேருக்கே வழங்கப் பட்டுள்ளது. மீதமுள்ள 84,793 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்குவதன் அடிப்படையில் மிகுதி உள்ளவர்களுக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கப்படும்.

உண்மையில் 7 : 4 என்ற சரத்து காரணமாக பிரசாவுரிமையற்ற நிலை தொடர்ந்து நிலவ வாய்ப்புண்டு. இதற்கெதிராகவே எதிர்ப்புக் குரல் எழுப்பப்பட வேண்டும்.

இதுவரைக்கும்,!197,535 பேருக்கு இலங்கை பிரஜாஉரிமை வழங்கப் பட்டுள்ளது. புதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை பிரஜாவுரிமை பெற வேண்டியவர்கள், 271,465 பேராகும். எவ்வாறாயினும், 86ம் ஆண்டு ஒப்பந்தத்தின் படி, இலங்கை அரசாங்கம், நாடற்றவர் என்ற நிலையிலிருந்தவர்களின் பிரஜாவுரிமை தீர்க்கப் பட்டுள்ளமையே இங்கு கவனிக்க வேண்டியது. சந்தேகத்திற்கு இடமின்றி இது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகும்.

இந்த ஒப்பந்தம், முன்னைய ஒப்பந்தங்களிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும். 1964 ஆம் ஆண்டு, 1974ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள், இரண்டு நாட்டு தலைவர்கள் மட்டத்தில் செய்துகொள்ளப் பட்டவையாகும். ஆனால், தற்போதைய உடன்பாடு, தூதரக மட்டத்தில் செய்து கொள்ளப்பட்ட ஒரு நிர்வாக ஏற்பாடே. இத்தகைய ஏற்பாட்டின் விளைவுகளை சர்வதேச தொடர்புகளில் நிபுணத்துவம் உடைய வர்களே எடுத்துக்கூற முடியும். இருந்தாலும், இந்த ஒப்பந்தம், ஒரு அரசியல் தன்மையை உள்ளடக்கியுள்ளது, சம்பந்தப்பட்ட இரண்டு நாடுகளின் பேச்சு வார்த்தைகளினால் மாத்திரம் உருப்பெற்ற ஒன்றல்ல இது. உள்நாட்டில் இந்த தீர்வினுக்காக, பலத்த கோரிக்கை தொடர்ந்து எழுப்பப்பட்டு வந்துள்ளது, இ. தொ.கா.வின் சமீபத்திய பிரார்த்தனைப் போராட்டம் இதுபற்றியவொன்றே. சம்பந்தப்பட்ட மக்களை கலந்து கொள்ளாமல் செய்யப் பட்ட உடன்படிக்கை என்ற குறைபாடு இதற்கும் பொருந்துகின்றவொன்றே. ஹிந்து பத்திரிகைக்கு, தொண்டைமான் கொடுத்த பேட்டி ஒன்றில், (25-1-86) இதனை தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். இலங்கையிலுள்ள இந்திய தூதரகம்,தன்னைகேட்டு இந்த உடன்பாட்டிற்கு ஒப்புதல் தந்திருந்தால், இவ்வுடன்பாட்டின் சரத்துக்களை தன்னால், கணிசமான அளவிற்கு சாதக

**ஓர் ஆய்வாளர்**

மாக மாற்றியிருக்கமுடியும் என தொண்டைமான் கூறுகிறார். அதாவது, பாராளுமன்றத்தில் சட்டமொன்றை நிறைவேற்றி பிரஜாவுரிமை வழங்கப்படுகின்ற காலம் 18 மாதம் என்பதை, அரசியல் அமைப்பு திட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதன் மூலம் குறைத்திருக்க முடியும் என்பதே அவரது வாதம். இந்த ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட மக்களின் கோரிக்கைகளின் விளைவாக உருவாகியவொன்றுதான் என்றாலும், அவர்கள் முழுமையாக கலந்து ஆலோசிக்கப்படவில்லை என்பதும், மனதில் இருத்த வேண்டியவொன்றாகும்.

ஆனால், இந்த உடன்பாட்டினைப்பற்றி நாம், அவ்வளவு திருப்தி பட்டுக்கொள்ள முடியாது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் சிவில் உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொண்ட சிரிமாவோ பண்டாரநாயக்க, இந்தஉடன்பாட்டினை எதிர்த்துப் போர்க்குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளார். அந்த நாட்டிலே கொழுந்து விட்டெரிகின்ற, வகுப்புவாத நெருப்பினுக்கு,எண்ணெய் வார்க்கின்றதாகவே, அவரது நடவடிக்கை அமைந்துள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் இந்தியத்தமிழர்கள் தங்களது வாக்குகளை யு.என்.பிக்கே கொடுத்துள்ளனர். இந்தியதமிழர்களின் வாக்குப்பலம் அதிகரித்தால், அது யு. என். பியின் பலத்தையே அதிகரிக்கும் என்பதே சிரிமாவோவின் கணிப்பீடாகும், இவ்வுடன்பாடு குறித்து, ஏனைய கட்சிகளின் நிலைப்பாடு என்னவென்று தெரியவில்லை. யு. என்.பி. கட்சியின் தீவிரவாத போக்குள்ளவர்கள், சிறில் மெத்யூ தலைமையில் எதிர்ப்புக்குரல் எழுப்பியுள்ளனர். எதிரணியிலிருக்கும், ஸ்ரீலங்கா மஹாஜனக்கட்சி (சிரிமாவோவின்மருமகன் விஜயகுமாரரணதுங்க தலைமையில் இயங்குவது) இலங்கை சம சமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் நிலைப்பாடு, சிரிமாவோவின் எதிர்ப்பினை நிர்ணயிக்கின்ற ஒரு சக்தியாக இருக்கக்கூடும். சிரிமாவோவினது, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை விட, ஏனைய கூட்டணி கட்சிகள் செல்வாக்கு பெற்று வருவது நாம் நினைவில் இருத்த வேண்டியவொன்றாகும்- இந்தக் கூட்டணி கட்சிகளோடு, இந்திய தமிழர்களுக்கு, ஒரு நெருங்கிய, இணக்கம் இல்லாத நிலையில் அவர்களின் அரசியல் நிலைப்பாடு எத்தகையதாக அமையும் என்பதை ஊகிக்க முடியாதிருக்கின்றது. இந்திய தமிழர்களை தன்பால் ஈர்க்க வேண்டிய அரசியல் தேவை எதிர்காலத்தில் இருப்பதால், இவ்வொப்பந்தத்தை அவர்கள் ஒருவேளை ஆதரிக்கக்கூடும். எதுவாயினும் சிரிமாவோவின் எதிர்ப்பு. இக்கூட்டணி கட்சிகளின் நிலைப்பாட்டிலும், தற்போதைய அரசியல் நிலைமைகளிலுமே தங்கியுள்ளது.

ஏன் இந்த உடன்பாடு இப்போது நிறைவேறியுள்ளது என்பதும், பொருத்தமான ஒரு கேள்வியாகும். சர்வதேச மட்டத்தில் நிலவிய நிர்ப்பந்தம் காரணமாகவே,சிரிமாவோவின்

(11-ம் பக்கம் பார்க்க)

# ஒப்பந்தத்தை எதிர்த்து ஸ்ரீமாவோ போர்க்குரல்

கடந்த ஆறாண்டு காலமாக வாக்குரிமை இழந்து இலங்கை அரசியலில் அநாதையாகத் திகழ்ந்த சிறிமா அம்மையாரிடம் நமக்கு மிகுந்த அனுதாபம் உண்டு. உலகத்திலேயே முதல் பெண்பிரதமராக வரலாற்றுப் புகழ்பெற்றவர் சிறிமா. இலங்கையில் துணிகரமாக பிரதமர் பொறுப்பேற்று, புரட்சிவாதிகளான சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் ஆகியோரரைக் கூட்டுசேர்த்துக் கூட்டாட்சியமைத்தவர். சர்வதேச அரசியலில் அணிசேரா நாடுகளின் தலைவியாக இருந்து மூற்போக்கு நாடுகளின் பாராட்டைப் பெற்றுக் கொண்டவர். இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே போர் நடந்த பொழுது சமாதானத் தூதுவராகச் சென்று இருநாடுகளின் நன்மதிப்பையும் சன்மானத்தையும் பெற்றுக்கொண்டவர். சீனா பண்டாரநாயக நினைவு மண்டபத்தை இலங்கைக்குப் பரிசாக வழங்கியது.

இந்தியா சிறிமா—சாஸ்திரி உடன்படிக்கையில் கையொப்பமிட்டு சிறிமாவின் சிங்கள செல்வாக்கைப் பன்மடங்கு உயர்த்தியது. அவரது ஆட்சியில் நிலச்சீர்திருத்தம், எண்ணெய் விநியோகம், தேசியமயம், மக்கள் வங்கி போன்ற முக்கிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன நவீன காலனித்துவ ஆதிக்க வெறியிலிருந்து இலங்கையை மீட்க சிறிமா செயல் பட்டார். இந்து சமுத்திர பிராந்தியம் சமாதான பிராந்தியமாக பிரகடனம்படுத்த வேண்டுமென்று ஐ.நா. சபையில் வன்மையாக மொழிந்தவர் சிறிமா.

அதே சமயத்தில், சிங்கள—பௌத்த அரசியலில் ஆணித்தரமாக நம்பிக்கை வைத்திருந்தார். தமிழர்களின் பிரச்சினையில் அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்தார், இலங்கை இந்தியர்களை நாடு கடத்துவதில் தீவிரமாக இருந்தார். கண்டிச்சிங்களர்களை உயர்த்துவதில் முழுமூச்சோடு பாடுபட்டார். இந்தியாவிடமிருந்து ஒப்பந்தம் மூலம் கச்சதீவைக் கைப்பற்றிக்கொண்டு, பாக்கிஸ்தான் இந்தியாவோடு போர் செய்த கட்டத்தில் இந்தியாவிற்கு எதிராக பாக்கிஸ்தானிய படைகள் பங்களாதேஷ் செல்ல அனுமதித்தவர்.

1971ம் ஆண்டு இளைஞர் புரட்சி ஏர்பட்டபோது ஈவிரக்கமின்றி அவர்களை அடக்கியவர் இந்தியாவிடமிருந்து படை உதவியும் பண உதவியும் பெற்றவர். சாதுரியமிக்க அரசியல் தலைவர்.

அவருடைய உள் நாட்டுச் சாதனைகளை விட, சர்வதேசிய அரசியல் கண்ணோட்டம் தான் அவருக்குப் பெருமை தேடித் தந்தது.

இந்திய நாட்டின் நல்லுறவையும், நல்லெண்ணத்தையும், தன்னுடைய சுய அரசியல் வளர்ச்சிக்கு அவரைப் போல் மிகையாகப் பயன்படுத்திக் கொண்டவர்கள் வேறெவருமில்லை இன்னும் கூட இந்தியாவை எதிர்த்துப் பேசும் அளவுக்கு இந்திய எதிராளி அல்ல.

ஆனால் சிரிமாவுக்கு கண்மூடித்தனமான சில அரசியல் நம்பிக்கைகள் உண்டு இலங்கை மலைநாட்டில் உள்ள பத்து லட்சம் இந்தியர்களில் பெரும் பாலானோரை நாடு கடத்தி விட்டு, எஞ்சியுள்ள சிலரை காலப்போக்கில் சிங்கள பௌத்தராக மாற்றி விட வேண்டுமென்பது தான் அவரது கொள்கை ஆகவே மலையகத்தில் தமிழர்கள் தமிழர்களாக வாழக்கூடாது அவர்களது எண்ணிக்கையை எவ்வளவு குறைக்க வேண்டுமோ, அவ்வளவுக்குக் குறைக்க வேண்டும் என்பது தான் சிரிமாவின் அரசியல் கோட்பாடு அதனால் தான் 1964ல் இந்தியப் பிரதமர் சாஸ்திரியோடு பேரம் பேசி உலகத்திலேயே மிகக் கேவலமான ஒரு ஒப்பந்தத்தை செய்தார்.

சிரிமா சாஸ்திரி ஒப்பந்தம் ஒரு அவமான ஒப்பந்தம் என்பதற்குக் காரணம் அது எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டது என்பது தான் 1948ல் குடியுரிமைச் சட்டம் என்ற பெயரில் மலையக மக்களை அடிமைகளாக்கியது சிங்கள இனவெறி, மனித அடிப்படை உரிமை மறுப்பு, மிகப் பெரிய சர்வதேசத் துரோகம் அதனால் இந்தியா நல்ல சாட்டை அடி கொடுத்தது இவர்கள் இந்தியர்கள் அல்ல என்று முடிவு கட்டியது இதனால் தான் 9,75,000 பேர் நாடற்றவர்களானார்கள் இதனைத் தீர்ப்பது எப்படி? அவரவர்களின் விருப்பப்படி இந்தியராகவோ இலங்கையராகவோ அவர்கள் குடியுரிமை பெற ஓர் வாய்ப்பளித்திருந்தால் இந்த உடன்பாடு ஒரு ஒழுங்கான ஏற்பாடு என்று நாம் ஒற்றுக் கொள்ளலாம் ஆனால் இத்தனை பேர்தான்

**'பிறைசூடி'**

இந்தியராகலாம்; இத்தனை பேர் தான் இலங்கையராகலாம் என்றுமனு போடுவதற்கு முன்னால் எப்படித் தீர்மானிக்க முடியும்? தீர்மானிக்க யாருக்கு உரிமை இருக்கிறது? அதனால் தான் இந்த ஒப்பந்தம் கேவலமான ஒப்பந்தம் மனிதர்களின் உரிமைகள் அவர்களது பிறப்புரிமையின் அடிப்படையிலே அமைய வேண்டும் அல்லது அவர்களின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப அமைய வேண்டும் சம்பந்தா சம்பந்தமில்லாதவர்கள் எவ்வித அடிப்படையுமின்றி தீர்மானிப்பது ஆடுமாடுகளைப்பற்றித்தான் இருக்கமுடியுமே தவிர மனிதர்களைப்பற்றியதாக இருக்க முடியாது.

ஆகவே தான் மனிதர்களின் சுய விருப்பு, வெறுப்பு அடிப்படையில் பார்க்கும் பொழுது 5,06,000 பேர்கள் மட்டுமே இந்தியக் குடியுரிமை கோரி உள்ளார்கள். ஆகவே எஞ்சி உள்ள அனைவரும் இலங்கையர்களாகிறார்கள். இது தான் இன்றைய முடிவு ஜனவரி 15 1986ல் இந்தியாவும் இலங்கையும் இந்த முடிவை ஏற்றுக் கொண்டிருப்பது மிகவும் நீதியானதாகவும் நேர்மையானதாகவும் நமக்குத் தெரிகிறது. இது உலகம் ஒப்புக் கொள்ளக் கூடிய நிலைமை ஆனால் இந்த அடிப்படை உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாமல் சிரிமா சீறுகிறார் என்றால் அவர் இனவெறிக்குப் பலியாகி விட்டார் என்று அர்த்தமாகிறது.

ஜயவர்த்தனா இலங்கையின் பூர்வீகத் தமிழர்கள் மீது போர் தொடுத்திருக்கிறார் சிறிமா மலையகத் தமிழர் மீது போர் தொடுத்திருக்கிறார்,

சிங்களத்தலைவர்களின் இனவெறி எத்தனை ஆழமானது எத்தனை அபலட்சணமானது என்பதை உலகம் உணர்ந்து கொள்வதற்கு ஒருவாய்ப்பு ஏற்படுகிறது சிரிமாவின் பதவி வெறி இனவெறியாக உருவெடுத்திருக்கிறது, 1974ல் தோட்டங்களை தேசியமயமாக்கிய பொழுது இனவெறியைக் கட்டவிழ்த்து விட்டார்கள். தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு தீ வைத்துக் கொளுத்தினார்கள் அவர்களின் உடமைகளைச் சூறையாடினார்கள், 1977ல் அதே வகையில் மலையகத் தமிழர்களைக் கொலை செய்தார்கள். சிவனு லட்சுமணன் என்ற வீர இளைஞனின் உயிரைக் குடித்தன சிங்களத் தோட்டாக்கள். அனுரா பண்டாரநாயகாவும் தமிழ் விரோதக் கருத்துக்களையே சீரியஸ் அரசியலாகப் பிதற்றுவார்.

சிரிமாவின் போர்க்குரல் தமிழர்களுக்கு எச்சரிக்கையாகவும் சவாலாகவும் அமைகிறது. சிரிமாவின் கூற்றில் பச்சை இனவெறி தவிர வேறொன்றுமில்லை. சிங்களவர்களுக்குப் பாராளு மன்றத்தில் அரசியல் பிரதிநிதித்துவம் கிடைக்காது என்பது அப்பட்டமான பொய். 1948ல் இருந்த நிலைமையல்ல 1986ல் 1948ல் மலையக மக்கள் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 10 சதவிகித

(11ம் பக்கம் பார்க்க)

## சுற்றுப்புறச் சூழல்

# தொல்லை மிகு தொழிற்சாலைகள்

அறிவியல் தொழில் வளர்ச்சி மனிதகுலத்துக்கு எவ்வளவோ நன்மை செய்துள்ளது. எனினும், லாப நோக்கு மட்டும் கொண்ட மக்களால், தொழில் பெருக்கம் செய்து வரும் எண்ணற்ற கொடுமைகள் செய்து வருகிறது. பூமியின் நிலப் பரப்பே உயிரினம் வாழ தகுதியற்றதாக ஆகிவிடுமோ என அஞ்சவேண்டியுள்ளது. அவற்றில் சிலவற்றை பார்ப்போம்.

இந்திய தொழிற்சாலைகளில் இருந்து வரும் நஞ்சுமிகு புகைகள் மக்களிடத்தில் காச நோய் போன்ற வியாதிகளை பரப்பி வருகிறது, புகையிலுள்ள நஞ்சு துகள்கள் அகற்றப்பட வேண்டும் என சட்டம் இருப்பினும் சீர்துவாறில்லை. புகை தவிர மற்ற கழிவு பொருட்களும் ஆறுகள் போன்ற நீர் நிலைகளில் கலக்கின்றன. ஆம்பூர், வாணியம்பாடி பகுதியிலுள்ள தோல் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் அப்பகுதி நிலங்களை விவசாயத்திற்கு பயன் இல்லாமல் ஆக்கி வருகிறது. பவானி ஈரோடு போன்ற இடங்களில் காவேரியே சாயபட்டரையாக மாறி காவிரி தண்ணீரை பல்வண்ண நிறமாக்கி கொண்டிருக்கிறது. தண்ணீர் சுத்தம் கெடுவதால் பயிர்களை பாதிப்பது மட்டுமல்ல. பலவகை நோய்களையும் மனித இனத்தில் பரப்பு கிறது.

இன்று உலகத்தை நோக்கியிருக்கும் பயங்கர கழிவு அணு ஆயுதங்கள் அல்ல. அணு உலைகளிலிருந்து கசிந்து கொண்டிருக்கும் கதிர்வீச்சுகள் தான். கதிர்வீச்சுக்கு உட்பட்ட மனிதன் மட்டுமல்ல நோயுறுவது அவனுடைய வருவகால தலைமுறைகள் மிகவும் பாதிக்படும். பிறக்கின்ற குழந்தைகள் கைகால் குறைபாடுகளோடு பிறக்கும். பம்பாயிலுள்ள பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தின் அணு உலையிலிருந்து வெளியேறும் அதன் வெப்பமும் கடலினுள் விடப் படுவதால் அப்பகுதியில் உயிரினமே வாழ வழியில்லை. மேலும் அணு உலை கழிவுகளை மிகுந்த பாதுகாப்போடு வெளியேற்றி மிக ஆழமான (பல நூறு அடிகள்) குழியில் புதைக்க வேண்டும். நாம் அத்தகைய பாதுகாப்பு முறைகள் குறித்து கனவு தான் காணமுடியும்.

தொழிற்சாலை கழிவுகளும், சாக்கடைகளும் சேர்ந்து சென்னையை கூவமாக நாற வைத்துக் கொண்டிருப்பது வெட்ட வெளிச்சம். சென்னை மணலி பகுதிக்கு ஒருவன் வாழ்நாளில் ஒரு தடவை செல்வான் என்றால், அவன் ஆயுளில் சில மணி நேரங்களாவது குறையும். கொடுமையினும் கொடுமை இவற்றால் மிகவும் பாதிக்கப்படுவது ஏழை மக்கள்தான்'

-பிரிட்டோ

❋

'இந்தியாவின் சுற்றுப்புறம்- என்ற தலைப்பில் 'சிடிசன்ஸ்' என்றொரு அமைப்பு சென்டர் ஃபார்சயன்ஸ் அண்ட் என்விரோல்மென்ட், நியூடெல்லி சார்பில் இரண்டாண்டுகளுக்கு முன்பு 200 பக்க அறிக்கையொன்றை சமர்ப்பித்தது. இந்த அறிக்கைக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. ஆனால் மக்கள் நலன் கருதி, தனிப்பட்டவர்களால் ஆராய்ந்தறிந்து எழுதப்பட்ட கட்டுரை இது.

இந்த ஆய்வுக் கட்டுரையை 'தி நியூ சயன்டிஸ்ட்' என்றபத்திரிகை கவர் ஸ்டோரியாக வெளியிட்டபோது உலகம்முழுவதும்பெரும் வரவேற்புகிடைத்தது. இந்திய பத்திரிகைகள் மட்டுமின்றி எக்கனாமிஸ்ட், லே மாண்டே, தி கார்டியன் போன்ற பத்திரிகைகளும் இதனைப்பாராட்டி வரவேற்றன. ○

---

## சிறுகதை

# 'அது அழவேயில்லை

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

நாய்கள் ஊளையிட்டு ஓடின கோழிகள் பறந்தன.

அடுத்த நிமிடம்.... என்ன; வென்று அறியும் முன்னரே பல வெறியர்கள் செல்லம்மாவின் வீட்டுக்குள்ளே புகுந்து விட்டனர்.

பொருட்கள் கிடைக்காத கோபத்தில் இருந்த சாமான்களை உடைத்து போட்டு வெளியேறினர் சில சிங்கள வெறியர்கள் சிலர் கோழிகளை தொங்கி கிடந்த துணிகளை தட்டு முட்டு சாமான்களை கூட எடுத்து சென்றனர்.

ஒருவன் செல்லம்மாவை பார்த்தான் சிலை போன்று இருந்த அவள் அழகு, குழந்தைக்கு பால் கொடுத்துகொண்டிருந்த நிலை....அந்த வெறியர்களின கண்களின் தெருப்பூட்டின....

நான்கு மைலுக்கு அப்பாலே தேயிலை ஏற்ற போயிருந்த செல்லதுரைக்கு தனது லயம் நோக்கி காடையர்கள் போனது பற்றி இப்போதுதான் தெரிந்தது.

ஓடி வந்து கொண்டிருந்தான்—

குழந்தையை அணைத்துக் கொண்டு, அவர்களோடு மல்லாடிக் கொண்டிருந்தாள்.

குழந்தை இழவேயில்லை.

குழந்தையை இழுத்து ஒருவன் வீசினான். அடுக்கி வைத்திருந்த தேயிலை மிலாறு நடுவிலே போய் அது வீழ்ந்தது.

ஓடி வந்தவன் அப்படியே நின்றான். செல்லம்மாவின் ஆடையெல்லாம் கிழிக்கப்பட்டன. அந்த பேய்கள் ஒன்று மாறி ஒன்று அவளை....செல்

**கே. கணேஷ்குமார்**

லத்துரை, அருகில் இருந்த ஒருவனின் குரல் வலையை பிடித்து இறுக்கினான்.

குரல்வளை பிடித்திருந்த பல பேர் முன்னால் இவன் என்ன செய்ய முடியும். கைகளை பிடித்து இழுத்தனர்- அவனை நையப்புடைத்தனர். ஆனால் அவன் பிடியோ மேலும் மேலும் இறுகியது,

ஒருவன் கத்தியால் வெட்டியே விட்டான்..... துண்டிக் கப்பட்ட அவனது தலை செல்லம்மாவின் உடல்மேல் போய் வீழ்ந்தது.

பிடித்திருந்த அந்த மனிதன் துண்டாகப்பட்ட குரல் வளை உயிரற்று வீழ்ந்தான்.

அவளும் மடிந்தாள்.

தேயிலை மிலாறு மீது வீழ்ந்துகிடந்த குழந்தை அழவில்லை.

அந்த காட்சியை குறுகுறுத்துப் பார்க்கிறது.

குழந்தை அழவேயில்லை, ○

**மலையக மக்களின் விடுதலை இனவாத அடிப்படையா? இல்லை வேறு வழியா?**

—விவாதம்

# மலையக மக்கள் விடுதலை பெற தனித்தவமான நிலைப்பாடு காணவேண்டும்!

## காமினி சால்வடோர்

**1948-ம்** ஆண்டு மலைநாட்டு தமிழ் மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. இதன் மூலம் இலங்கை தொழிலாளர் வர்க்கத்திலிருந்து பிரிக்கப்பட்டார்கள். அதன் பின்னர் தான் இவர்களது வாழ்க்கை கேள்விக்குறியாக அமைத்தது. அதற்கு முன் அப்படியல்ல; இந்த நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதியினராக இருந்தார்கள்.

இன்று இந்த மக்கள் கேள்விக்குறியாக இருக்கிறார்கள். இவர்களதுஎதிர்காலம் என்ன? இவர்களுக்கு இந்த நாடு சொந்தமா? இவர்கள் இந்த நாட்டின் சொந்தக்காரர்களா? இவர்கள் இந்தியா செல்ல வேண்டியவர்களா? அத்தனை பேரும் போக வேண்டியவர்களா?

சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் உருவானது. இந்த ஒப்பந்த அடிப்படையில் தீர்மானிக்கப்படாத மக்கள் பல லட்சம் இலங்கையில் இருக்கிறார்கள். ஒப்பந்தத்தால் நாடு கடத்தப்பட்டு இந்தியாவுக்கும் பல லட்சம் வந்திருக்கிறார்கள்.

1956க்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் மத்தியில் தமிழ் சிங்கள வேறுபாடு நீண்டது. அப்போது இலங்கை அரசில் இனவாதம் முக்கிய அங்கம் வசிக்கத் தொடங்கியது—வளர்ந்தது. இதனால் இலங்கைத் தமிழ் மக்கள் ஈழம் என்று நாடு கேட்கும் நிலைக்கு தள்ளப் பட்டார்கள்,

இந்த சூழ் நிலையில் தான் நாம் மலையக மக்களுடைய எதிர் காலத்தை அவர்களது சமூக விடுதலையை பார்க்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்,

ஈழம் கேட்கும் தமிழர்களுக்கும் மலையக மக்களுக்கும் வித்தியாசம் தெரியாமலே மலையக மக்கள் தாக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் ஈழம் கேட்கவில்லை.

இந்த நிலையில் ஈழப் போராளிகள் மலை நாட்டையும், மலைநாட்டு தமிழ் மக்களையும் பார்க்கும் நிலை உண்டாகியுள்ளது.

ஈழப் போராளிகள் நினைப்பது என்னவெனில். ஈழ விடுதலையே அவர்களுக்கு தீர்வு என்று எண்ணுகிறார்கள். அதே வேளையில் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள புதிய இடதுசாரிகளோ ஒட்டு மொத்த சோஷலிசப் புரட்சியில் தான் மலையகத் தமிழர்களுக்கு தீர்வு இருப்பதாக சிந்திக்கின்றனர்.

இந்த இரண்டிலும் ஓர் உண்மை இருக்கவே செய்கிறது.

**அது என்ன?**

ஒன்று — மலையகத் தமிழர்கள் தமிழ் மொழி பேசுகிறவர்கள். அதனால் அவர்கள் மொழி ரீதியாக வட-கிழக்கு தமிழர்களோடு ஒரு தொடர்பு இருக்கிறது.

அதே வேளையில் அவர்கள் தொழிலாளர்வர்க்கம். இலங்கையில் சோஷலிச சமுதாயம் உருவானால் தான் அவர்களுக்கு உண்மையான விடுதலை உண்டாகும் என்பது உண்மை.

ஆனாலும் இவர்கள் தமிழர்கள் தமிழர்கள் என்பதால் ஈழத்தோடு இணைய முடியாது. அதனால் ஈழத்தில் தான் அவர்களுடைய விடுதலை என்பதும் சொல்ல முடியாது காரணம் அவர்கள் வாழும் இடம் சிங்கள பிரதேசமாகும். அது ஒருநாளும் ஈழம் என்ற எல்லைக்குள் செல்லாது.

அது மட்டுமல்ல; பெரும்பாலான மலையக மக்கள் தோட்டங்களை விட்டு பிற பிரதேசங்களிலும் சென்று வாழ முடியாது. அதனால் ஈழம்என்ற கோரிக்கையை முன் வைத்து தீர்வு காண முடியாது.

அதே வேளையில் இலங்கை என்ற சோஷலிசப் புரட்சியை வைத்துப் பார்த்தால் தொழிலாளர்கள் என்றும் - தமிழர்கள் என்ற நிலையில் இருக்கும் ஒடுக்குமுறையிலும் - அடிப்படை உரிமைகளுக்கு போராடும் ஒரு நிலைமை இருக்கிறது.

சிங்கள முற்போக்கு சக்திகள் இந்த உரிமைகளுக்காக போராமல் அம்மக்களை சோஷலிச புரட்சி என்கிற அடைப்புக்குள் அடைக்க முடியாது — பிரச்சணைகளைத் தீர்க்கவும் முடியாது.

உண்மையை எடுத்துக் கொண்டால் தேசீய சிறுபான்மையினராக இருக்கிறார்கள்.

இவர்கள் முன்னே இருக்கும் இரு உறவுகள் அடிப்படையில் தங்கள் விடுதலைக்காக புரட்சிகர இயக்கம் வலுவாக வேண்டும் இவர்கள் மத்தியில் இவர்கள் தமிழர் என்ற இனவாத ஒடுக்கு முறைக்கு ஒரு புறமும் தொழிலாளர் என்ற வர்க்க அடக்கு முறைக்கு இன்னொரு புறமும் போராட வேண்டும்.

இது விடயத்தில் இவர்கள் தனித்துவ நிலைப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம்.

அப்படி ஒரு நிலைப் பாட்டினை எடுத்தால்தான் சிங்களத் தொழிலாளர்களுடனான உறவுகளை வலுப்படுத்தலாம். அதே வேளையில் தமிழ் தேசிய இன விடுதலைக்கான ஒரு 'சுதந்திரமான வழியினை' எடுக்க முடியும்.

ஈழப்போராட்டத்தின் எல்லா வகை சக்திகளும் நுழைய முடியும். இந்த சக்திகள் மலையக மக்களின் தனித்துவமான முடிவில் எதுவும் செய்ய முடியாத நிலை உருவாகும்.

சிங்கள உழைக்கும் மக்களின் பிரதான எதிர்ப்பும் இந்த முதலாளித்துவ சமூக 'அமைப்புத் தான். வடகிழக்கு மாகாண மக்களின் எதிரியும் இந்த முதலாளித்துவ சமூக அமைப்பும் இந்த இனவாத அரசியலும் தான்.

மலையக மக்களின் முக்கிய எதிரிகள் யார்? இவர்கள் தான்.

அதே நிலையில் இன்றைக்கும் அவர்களது பொருளாதாரத்தில் அங்கம் வகிப்பது பெருந்தோட்டங்கள் - அவற்றில் பணி செய்யும் தொழிலாளர்கள் என்ற வகையிலுல் பிடி இருக்கிறது.

இந்த பொது எதிரியை வீழ்த்த சிங்கள தொழிலாளர்களுக்கும் தமிழ் விடுதலை போராளிகளுக்கும் இடையில் இருக்கும் முக்கிய சக்தி இந்த மலையகத் தொழிலாளர் வர்க்கம் என்பதை மறக்க முடியாது.

ஆக இரு போராட்டங்களிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு முக்கிய பங்குண்டு.

அந்த பங்கை சரியாக நிறைவேற்றுவது எப்படி? எந்த நேரத்தில் எதிரியைப் பார்த்து தாக்குதல் நடத்த வேண்டும்? தன் சக்தியை எப்படி ஸ்தாபனப் படுத்தி இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டியது மலையக மக்களின் கையில் இருக்கிறது.

மலையக மக்கள் விடுதலை மலையக மக்கள் கையில்தான் இருக்கிறது. இந்த விடுதலை தான் இலங்கையின் ஒட்டு மொத்த சோஷலிச விடுதலைக்கும் துணை நிற்பதாகும். ○

# அமைதி ஆண்டின் அடிச்சுவட்டில் ....
# மனதை நெருடும் உலக நடப்புகள்

அமைதி ஆண்டின் தொடக்கத்திலே, உலகை பல்வேறு வகையான பிரச்சினைகள் சூழ்ந்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவுக்கும் ரஷியாவுக்குமிடையே நடைபெறும் 'ஜனிவா சமாதான பேச்சு வார்த்தைகள்' தொடர் நாடகம் பூர்த்தியடைய வில்லை. ரீகனின் 'நட்சத்திரப் போர்' மனித குலத்திற்கு பெருத்த அபாயமாக விளங்குகின்றது.

'விண்வெளி ஆயுத போட்டியில் சேர ரஷ்யா நிர்ப்பந்தப் படுத்தப் பட்டால், அந்தப் போட்டியில் அமெரிக்காவை விட பின்தங்கிய நிலையில் ரஷ்யா இருக்காது'' என்று ரஷ்யத்தலைவர் கொர்ப்பசேவ் அறிவித்துள்ளார். மனித இனத்தை பூண்டோடு அழிக்கும் அணு ஆயுதங்களை ஒழிப்பதற்கு பதிலாக புதிய புதிய கண்டுபிடிப்புகளுக்காக செல்வங்கள் நாசமாக்கப் படுகின்றன.

1979-ம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் நுழைந்த ரஷ்யராணுவம் இன்னும் திரும்பப் பெறப் படவில்லை, ஆப்கானிஸ்தான் விவகாரங்களில் அன்னியர் தலையீடு ரஷ்யாவின் பாதுகாப்புக்கு ஆபத்தினை ஏற்படுத்தும் என கருதியே ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் ஆப்கான் உள்ளது என காரணங்கள் கூறப்படுகின்றன. அமெரிக்கா கைப்பற்றி விடக்கூடாது என ரஷ்யா பிடித்துக் கொண்டது கண்டிக்க வேண்டியதே.

உகாண்டாவில், கடந்த வருடம் ஜூலையில் ராணுவ அதிகாரிகள் ஒன்று சேர்ந்து ஒபோடேயை பதவியை விட்டு தூக்கியெறிந்தார்கள். ஜெனரல் ஓகெல்லோ தலைமையில் ராணுவ ஆட்சிக்குழு அமைக்கப்பட்டது. இதற்கு நான்கு புரட்சி கோஷ்டிகள் ஆதரவளித்தன. 'தேசிய எதிர்ப்பு ராணுவம்' என்ற அமைப்பு ஒத்துழைக்க வில்லை. இந்த தேசிய எதிர்ப்பு இராணுவம் ஓகெல்லோவை தூக்கி எறிந்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ளது.

சோசலிஸ்ட்நாடான தெற்கு ஏமன் அதிபராக இருந்த அலிநாஸர் முகமது, கட்சி, ராணுவம், மக்கள் படை ஆகியவற்றைச் சேர்ந்த 50 உயர் அதிகாரிகளை கொலை செய்ய ஜனவரி 13-ம் தேதி உத்தரவிட்டதற்காக, ஏமன் சோசலிஸ்ட் கட்சி அவரை பதவி நீக்கம் செய்துள்ளது. பதவி இறக்கப்பட்ட முகமது எதிர்புரட்சி சக்திகளுடன் சேர்ந்து கொண்டு எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. இதுவரை 10,000க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பாக்கிஸ்தான் அதிபர் ஜியா ராணுவப் புரட்சியின் மூலம் பூட்டோவை தூக்கிலிட்டுக் கொன்றவர். தற்போது ராணுவ ஆட்சியை ரத்து செய்து, தேர்தல் நடத்த ஆயத்தம் செய்து வருகிறார். பிரதான எதிர்க்கட்சிகள் தேர்தலில் போட்டியிட மறுத்தால், தொடர்ந்து ராணுவ ஆட்சியே நீடிக்கும் என பயமுறுத்தியுள்ளார். அமெரிக்காவிடமிருந்து நவீன போர்த் தளவாடங்களைத் தொடர்ந்து பெற்று வருகின்றது. இச்செயல் இந்தியா, மற்றும் ரஷியாவின் பாதுகாப்புக்கு சவாலாக உள்ளது,

நிக்ரகுவா என்ற நாட்டில் இடதுசாரி கட்சி ஆட்சியில் உள்ளது. இதனை எதிர்க்கும் தீவிரவாதிகளுக்கு அமெரிக்கா தன் உளவுபடையான சி.ஐ.ஏ மூலம் மிகுந்த பணத்தை அளித்து வருகின்றது. தென் அமெரிக்க நாடுகளில் மனித உரிமைகள் காலடியில் மிதிக்கப்படுகின்றன. லெபனானில் கிருத்துவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்து வருகின்றது.

மத்தியத் தரைக் கடல் நாடான லிபியாவை, வறுமையின் கோரப் பிடியிலிருந்து மீட்டு, வளமைக்கு இட்டுச் சென்ற கர்னல் கடாஃபியை கொலை செய்ய, அமெரிக்கா பகிரங்கமாக தூண்டி வருகிறது ரீகன் நிர்வாகம் தங்களின் கடற்படை பிரிவு ஒன்றை மத்திய தரைக்கடல் பகுதியில் போர் விமானங்களுடன் நிறுத்திஅபாயகரமான சூழலை உண்டாக்கியுள்ளது.

'அமெரிக்காவின் சர்வ தேச பயங்கர வாதத்தை லிபியா சகித்துக் கொள்ளாது' என கூறும் கடாபி ஏவுகணை பொருத்தப்பட்ட கடற்படை ரோந்து படகு ஒன்றில் அமெரிக்காவின் கடற்படை நிறுத்தப்பட்டுள்ள இடம் தனக்கு சொந்தமானது என கூறி அதனைச் சுற்றிப் பார்த்துள்ளார். முஸ்லீம்நாடான லிபியாவில் பெண்களுக்கு முழுச்சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. கடாபியை அந்நாட்டு மக்கள் தெய்வமாகவே கருதுகின்றனர்.

பாலஸ்தீன விடுதலைப் படையினரும், ஈழம் கோரி போராடும் குழுக்களும் சர்வ தேசங்களின் கவனத்தை ஈர்ந்துள்ளனர். ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் இருக்கும் இவர்களின் போராட்டம் தீரம் மிக்கதாக உள்ளது. சில அறிவுச் சூன்யங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பணியில் ஈடுபட்டிருந்தாலும் போராட்டம் ஓயப்போவதில்லை.

❋

ஈழக் கவிஞர் சேரனின் வார்த்தைகளில் சொல்வதானால் வெல்வோமாயினும் வாழ்வோம். வீழ்வோமாயினும் வாழ்வோம். நமது பரம்பரை போர் புரியட்டும் என்ற நீறுபூக்காத நெருப்பில் உதித்த கவிதைக்கு இருக்கும் வல்லமை மகத்தானது.

உலகின் போராட்டம் புதியதல்ல. முரண்பாடுகள் முன்னேற்றத்தையே தழுவுகின்றன. அமைதியாண்டின் போராட்டங்கள் அவமானங்களல்ல. மக்கள் போராட்டம் தோல்வியடைந்ததில்லை. பழைய மரபுகளை தூக்கியெறிந்து புதியன புகுவதற்கு போராட்டம் அவசியமாகின்றது.

**-அசோகன்**

## வரப் பெற்றோம்

### யமன்

(கவிதைகள்)

ஆசிரியர்
**சேரன்**

வெளியீடு :
**சிலிக்குயில்**
20 கோதண்டபாணித் தெரு,
குடைந்தை-612001

**விலை : ரூபா. 5-00**

தமிழ் இலக்கிய உலகில் தமிழக இலக்கியத்தில் சுதந்திர காலப் படைப்புகள் ஒரு சகாப்தம் என்றால் ஈழத்து இலக்கியத்தில் இன்றைய ஈழ விடுதலைப்பற்றிய படைப்புகள் ஒரு சகாப்தம்.

இந்த இலக்கியப் பரபபில் சேரன் முன்னணிக் கவிஞராக திகழ்கிறார். இவர் கவிதைகளில் இவர் களத்திலே நின்று அனுபவித்த அனுபவங்களைக் காணலாம். 'குறும்பா' வுக்கு ஒரு மஹாகவி என்றால் இன்றைய ஈழ விடுதலைக் கவிதைக்கு சேரன் எனலாம்.

இது இவரது இரண்டாவது கவிதைத் தொகுதி-இரண்டாவது பதிப்புமாகும்.

**- 'தேனி'**

## தாயகம் திரும்பியோர் ....

(முதல் பக்கத் தொடர்ச்சி)

றார்கள் என்பதை குறிப்பிட வேண்டும்.

தாயகம் திரும்பிய உறுப்பினர்களுக்கு - வேலை வாய்ப்பு பெற்றவர்களுக்கு பாதகமாகவும், வேலை வழங்கும் தொழில் அதிபர்களுக்கு சாதகமாகவும் இவர்கள் இயங்குவதால், வேலை வாய்ப்பு பெற்ற உறுப்பினருக்கு ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை; பிரச்சனை விஸ்வரூபமெடுத்து தாக்குப்பிடிக்க முடியாதவர்களாய் அந்த வேலை விட்டே போய்விடுகிறார்கள். அதனால் எந்த நோக்கத்தோடு இந்த வங்கி செயல்படுகிறதோ, திட்டமிட்டு மறுவாழ்வு உதவிகள் அளிக்கிறதோ அந்நோக்கம் நிறைவேறாது போகிறது—இதற்கு அதிகாரிகளே காரணமாக இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல; இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர் பெரும்பாலானோர் தோட்டத் தொழிலாளர்கள் தான். இவர்களுக்கு வியாபாரம் போன்ற தொழில்களை சுயமாக செய்யத் தெரியாது. அதனால் அவர்களுக்கு வழங்கும் கடனுதவியால் எந்த பிரயோசனமும் இல்லாது போவதாலேயே வங்கி தொழில் நிறுவனங்களுக்கு கடனுதவி செய்வதன் மூலம் தாயகம் திரும்பியோருக்கு வேலை வாய்ப்பைப்பெற்றுக் கொடுக்க முனைந்திருக்கிறது. ஆனால் இப்போதுள்ள அதிகாரிகள் கேட்கிறார்களாம்: 'இங்குள்ளவர்களுக்கே வேலையில்லை; அகதிகள் ஏன் வேலை கொடுக்க வேண்டும். கடனைக் கொடுத்து அனுப்ப வேண்டியதுதானே' என்று.

அரசு திட்டம் தீட்டுகிறது; அத்திட்டங்களை நிறைவேற்றுவது தான் அதிகாரிகளின் கடமை. ஆனால் இவர்கள் அந்திட்டங்களை நிறைவேற்ற முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். அவற்றை நிறைவேற்ற மனம் இல்லாதவர்களாக மெத்தனப் போக்கும், உதாசீனமும் செய்து தாயகம் திரும்பியோர்களைப் பிரச்சனைக்குரியவர்களாக்குகிறார்கள் - அவர்கள் வாழ்வில் மண்ணை அள்ளிப் போடுகிறார்கள்.

ஐ.ஏ.எஸ். அதிகாரி சுந்தரராஜன் அவர்கள் நிர்வாக இயக்குனராக இருந்தபோது வங்கியில் பல சீர்திருத்தங்களை செய்தார். / தாலுக்கா அலுவலகம் போல இருந்த வங்கியை வங்கியாக மாற்றினார். தாயகம் திரும்பியோர் எவரும் அவரைப் பார்க்க அனுமதித்தார். எந்த பிரச்சனையோடு அனுகினாலும் அவற்றை தீர்த்து வைத்தார். வங்கிக்கு சம்மந்தமில்லாமல் பிரச்சனை-பிற தேவை என்றால்கூட தாயகம் திரும்பியோருக்கு உளமாற உதவினார்.

ஆனால் அவர் மாற்றலுக்கு பிறகு தாயகம் திரும்பியோர் வங்கியை அணுக முடியவில்லை; நிர்வாக இயக்குனர் பொறுப்பு மறுவாழ்வு இயக்குனரிடம் இருந்தாலும் அவரை பார்க்கவே முடிவதில்லை; அவரைப் பார்க்கவோ பிரச்சனைத் தீர்த்துக் கொள்ளவோ அதிகாரிகள் அனுமதி இல்லை; அவமதித்துத்தான் அனுப்புகிறார்கள்.

சார்பாளர்களால் தெரிவு செய்யப்பட்ட இயக்குனர் எம். ஆர். லிங்கம் அவர்கள் தாயகம் திரும்பியோர் சார்பில் அவர்களது நலனுக்காகவே நியமிக்கப்பட்டவர்.

இவரை பார்க்கவே முடியவில்லை; உறுப்பினர்கள் வேலை வாய்ப்புப்பெற்ற இடங்களுக்கெல்லாம், அடிக்கடி-பிரச்சனைகளைப்பொறுத்து - வருகை தரும் இவர் எங்கேயும் வருவதை காண வில்லை

வங்கியில்கூட இவரைப் பார்க்க முடிவதில்லை; இவர் இருக்கிறாரா இல்லையா என்று தெரிந்துக்கொள்ள அவருக்கென்று ஒரு இடம் இருப்பதாகக்கூட தெரியவில்லை; தப்பித்தவறி இவரைப் பார்த்தால்கூட வங்கியின் வாசலில், நடைப்பாதையில்தான் தரிசிக்கவேண்டும்-தாயகம் திரும்பியோருக்கு-அவர்கள் சார்பான இயக்குனருக்கு அத்துணை மரியாதை!

இவரைப்பற்றி விசாரித்தாலும், 'அவர் யார்? அரைப்பற்றி எங்களுக்கு என்ன தெரியும்! அகதிகளுக்கு டைரக்டர்தானே அவர் சொல்லி நாங்கள் என்ன கேட்க?' என்று பதில் அளிக்கிறார்கள்.

'அகதிகள் தானே' என்று அகதிகளுக்கும் தாயகம் திரும்பியோருக்கும் வித்தியாசம் என்ன? தாயகம் திரும்பியோருக்கு இந்த மண்ணில் வாழ என்ன உரிமை இருக்கிறது என்பதெல்லாம் தெரியாமல் மெத்தனப் போக்கும், உதாசீனமும் காட்டும் இந்த அதிகாரிகளால் தாயகம் திரும்பிய அங்கத்தவர்கள் எந்த நன்மையும்பெற முடியவில்லை; எதற்கும் வங்கியை அணுக முடியவில்லை.

இந்த நிலை, 1972, 73யில் வங்கி இருந்த நிலையை நோக்கிக் போய் கொண்டிருக்கிறதென்பதோடு, மெல்ல மெல்ல நிர்வாகச் சீர்கேட்டின் - ஊழலின் உறைவிடமாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

எதிர்வரும் வங்கியின் பிரதிநிதி பேரவைக் கூட்டத்தில் டெலிகேட்டுக்கள், வங்கி அதிகாரிகளின் இந்த போக்கை தாயகம் திரும்பியோர் மீது காட்டும் ஏளனப் போக்கை, மெத்தனத்தைக் கண்டிப்பார்களா? எதிர்ப்பார்களா?

**- மோகன் குமார்**

## 1986 ....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவில் உரிமைகள் மீண்டும் கொடுக்கப்பட்டது. ஓரிரு வருடங்களுக்கு முன்னர், ஜே. ஆர், ஜயவர்த்தனா, புதுடில்லியில், பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி ஒன்றில், இந்த நாடற்றவர் பிரச்சனை எனது நாட்டிக்குரியது. நானே இதனை தீர்த்துக் கொள்வேன்' என்று கூறியிருந்தார், எனினும், அது சம்பந்தமாக எதுவும் நடைபெறவில்லை! அதன் காரணமாகவே, இ.தொ.கா. போன்றவை போராட்டம் நடத்த திட்டம் போட்டன! ஈழ விடுதலை இயக்கங்களுக்கெதிராக, ஒரு பெரிய தாக்குதலை நடாத்த முயலுகின்ற அரசாங்கத்திற்கு, நாட்டின் முழுமையான ஆதரவு தேவை என்பதாலேயே, சிரிமாவோவின் உரிமைகன் மறுபடியும் கொடுக்கப்பட்டன. அதே அடிப்படையில், இந்திய தமிழர்களின் ஆதரவினை பெறுவதற்கு வேண்டியும், இந்த ஒப்பந்தத்தினை செய்திருக்கலாம். ஏதுவாக இருப்பினும் நாடற்றோர் பிரச்சனை இவ்வுடன் படிக்கையில் தீர இடமுண்டு. ஏற்கனவே, இவ்வுடன் படிக்கை, 1964ம் ஆண்டுதான் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு முரணானது என சிரிமாவோ, நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்துள்ளார். (ஹிந்து 26-1-86) நீதிமன்ற தீர்ப்பு வரவேண்டியுள்ளது அதன் பின்னர் பாராளுமன்றம் மசோதா நிறைவேற்றியுள்ளது. 18 மாதங்களில் அது அமுல் படுத்தப்படவேண்டும். உள்நாட்டு போர் அபாயங்கள் சூழ்ந்த நிலையில், என்ன நடக்கும் என்பதை நிச்சயமாக கூறிவிட முடியாது. O

## குடியுரிமை.....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக இருந்தார்கள் இன்றே 5 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறார்கள். ஜயவர்த்தனாவின் விகிதாசாரத் தேர்தல் முறையின் படி சிங்களப் பிரதிநிதித்துவம் குன்றுவதற்கு இடமே இல்லை. மலையகத் தமிழர்கள் என்றும் பின் தங்கிய சிறுபான்பான்மையாளராகத் தான் இருப்பார்கள். சிங்கள அரசுகளுக்கு அவர்களை வளர விடாது தடுக்கும் வல்லமை இருக்கிறது

ஆகவே அப்பட்டமான பொய்களைக் கூறி, இனவிஷத்தைக் கக்கித் தான் அரசியலில் லாபம் தேட வேண்டிய நிலைக்கு சிரிமா தள்ளப் பட்டிருக்கிறார் என்றால். அவரின் அரசியல் எவ்வளவுதரங்கெட்டு விட்டது என்று நாம் உணர முடிகிறது பாவம் இப்படித் தான் சிரிமா தன்னையே உலகக்கண்களின் முன் துகிலுரிந்து கொள்வார் என்ற துணிச்சலில் தான் ஜயவர்த்தனா அவரது குடி உரிமையையே கூசாது வழங்கி இருக்க வேண்டும். O

Editor & Publisher: T.S. RAJU, Gangaiamman koil Street, Madras-600094. Printed: L. S. Srinivasan at Jai Kalidas Press, 29, B.E. Colony 4thStreet, Madras-24.
Published in Collaboration with the ISLAND TRUST.

Regd. No. R. N. 42556/83 Regd. No. TN/MS (C) 702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின்
வழிகாட்டி

# மக்கள் மறு வாழ்வு

தொடர்பு முகவரி :
1, தெற்கு கெங்கையம்மன் கோயில் 2வது தெரு,
சென்னை-600094

## ஆர்ப்பாட்ட ஊர்வலம்

29-1-86 அன்று சென்னை நேப்பியர் பூங்காவிலிருந்து இலங்கைத் தூதரகத்தை நோக்கி ஆர்பாட்ட ஊர்வலம் நடந்தது.

- மலையக தமிழர்களுக்கு குடியுரிமை கொடு!
- ஈழப் பகுதியிலிருந்து இராணுவத்தை திரும்பப்பெறு!
- இராணுவ முகாமை சுற்றிப் பாதுகாப்பு வலையம் போடாதே!

போன்ற கோரிக்கைகளை முன் வைத்து தமிழக நட்புறவுக் கழகம், —மலையக மாணவர் இளைஞர் முன்னணி ஏற்பாடு செய்த ஊர்வலம் நடந்தது.

## இலங்கை அகதிகளுக்கு உதவி

30-1-1986 அன்று புயல் பாதுகாப்பு மையம், கிருஷ்ண ராஜீ. பட்டிணம் என்ற இடத்தில் அகதிகளுக்கு, 'ரெனெய்சன்ஸ் அறக் கட்டளை' ஸ்டவ் துணிமணிகள் மற்றும் படுக்க பாய் போன்றவற்றை அளித்து உதவியது. ரெனெய்சன்ஸ் அறக்கட்டளை, தாயகம் திரும்பிய மக்களுக்கும்' அகதிகளாக வந்திருப்பவர்களுக்கும் சேவை செய்து வருகிறது. O

## கூட்டுறவு வங்கி கூட்டம் ஒத்திவைப்பு

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் 10வது பிரதிநிதித்துவ பேரவைக் கூட்டம் பெப்ரவரி மாதம் 25ந் தேதிக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

பெப்ரவரி 3-ந் தேதி நடைபெறவிருந்த இக்கூட்டமே 25-2-86க்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது. கூட்டம் சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள ஹோட்டல் தாசபிரகாஷில் நடைபெறுகிறது. O

## காலமானார்

முன்னாள் அகில பர்மா தமிழர் சங்க செயுலாளரும், ஆல் பர்மா இண்டியன் காங்கிரஸ் செயலாளரும், 'பர்மா நாடு' எக்ஸ்பிரஸ் 'ஏஷியன் ரிபாட்ரியேட்ஸ்' பத்திரிகைகளின் ஆசிரியரும், கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழர்களுக்காக தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நல்லெண்ணத் தூது சென்றவருமான வி. எச். டேவிட் அவர்கள் தனது 80-வது வயதில் வியாசர்பாடியில் 1—2—86 சென்னையில் இயற்கையெய்தினார். O

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு எதிராக போராடவேண்டும்என தூண்டியும் வருகிறார். ஒரு போருக்கு தயாராக வேண்டுமென அறை கூவல் விடுத்துள்ளார்.

இதன் விளைவாக மலையகத் தமிழர் மத்தியில் பதட்ட நிலை உருவாகியுள்ளது. ஜனவரி மாத இறுதியில் தோட்டத் தொழிலாளர்களுக்கும் சிங்களவருக்கும் மோதல் ஆரம்பித்திருக்கிறது. திருவிழா ஒன்றின் போது தொழிலாளர்களை, சிங்கள காடையர்கள் தாக்கியதைத் தொடர்ந்து மூன்று தமிழர்கள் காயமடைந்தார்கள். கலவரங்கள் மூண்டது. தமிழ் மக்கள் வேலை நிறுத்தம் செய்ததோடு தலவாக் கொல்லை நகரில கூடி சிங்களவர் மீது எதிர் தாக்குதல் நடத்தியும், சிங்களவரின் கடைகளை தீயிட்டும் கொளுத்தியிருக்கிறார்கள். கல்லெறிந்தும், பாதையோரங்களில் மரங்களை வெட்டி போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்திருக்கிறார்கள். கிரேட் வெஸ்டன் ரயில்வே நிலையத்தை தீயிட்டு கொளுத்தியிருக்கிறார்கள்.

இரண்டு போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றனர். இவர்களில் ஒருவர் போலீஸ் கண்காணிப்பாளராவார். தமிழர்களுடைய தாக்குதல்களுக்கு ஆளாகி அகதிகளாக பலநூறு சிங்களவர்கள் தஞ்சம் புகுந்திருந்த போலீஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்.

இச் சம்பவங்களினால் 20க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என ஒரு செய்தியும் கூறுகின்றது. சிங்களவரின் கொடுமைகளுக்கு முடிவு

## மறுவாழ்வுத்துறை அலுவலர் நடவடிக்கை

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்திலுள்ள எதுமலை காலனியிலுள்ள தாயகம் திரும்பியோர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுப்பதாக திருச்சி மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் உறுதியளித்துள்ளார்.

மேற்படி காலனி தாயகம் திரும்பியோர் பல கோரிக்கைகளை முன் வைத்து 6-1-86 உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்தைத் தொடர்ந்து வருவாய்த்துறை அலுவலர் உறுதியளித்துள்ளார். உறுதியளித்துள்ளதோடு சில பிரச்சனைகள் குறித்து நடவடிக்கை எடுக்கமுசிறிகோட்டாட்சியாளருக்கு உத்தர விட்டுள்ளார். O

கட்ட தோட்டத் தொழிலாளர்கள் காலவரம்பற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

காலங்காலமாக சிங்கள இனவெறிக் கொடுமைகளுக்கு ஆளாகிவந்த தோட்டத்தொழிலாளர்கள் தற்போது எதிர்க்கவும், எதிர்த்து தற்காப்பு நடவடிக்கையில் இறக்கவும் ஆரம்பித்திருப்பது மலையகத் தமிழ் தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள புதிய திருப்பமாகும்.

இதன் எதிரொலி, மலையகத் தமிழ்மக்களை கடும் சோதனைக்கும் ஆளாக்கும் என்பதும் மறுக்க முடியாது. O